**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 188/2021</u>**
**<u>நாள் 16/02/2026 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – கோபி (PW1) | த/பெயர் – |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கூட்டி கூட்டி படிப்பேன், எழுத தெரியாது. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு திரும்ப செலுத்தவில்லை அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பணம் எந்த வகையில் வாங்கினார்கள் என்றால் ரொக்கமாக வாங்கினார்கள். எந்த தேதியில் வாங்கினார்கள் என்றால் 15.11.2018 தேதியன்று வாங்கினார்கள். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால் பிரதிவாதிகளே எழுதி எடுத்துவந்தார்கள். அதற்கு யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் பிரதிவாதிகளின் மகன் மற்றும் மகள் சாட்சிகளாக கையொப்பம் செய்தனர். அவர்களுடைய பெயர்கள் தெரியாது.

2. பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். கடனுறுதி சீட்டானது எந்தவகையான தாளில் எழுதப்பட்டது என்றால் முத்திரை தாளில் எழுதப்பட்டது.

நான் கூறியது போல் 05.11.2018ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு நான் எந்த கடனும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய் 2,00,000/– கொடுத்தேன். பிரதிவாதிகள் இதற்கு முன்னர் என்னிடம் கடன் எதுவும் பெற்றுள்ளனரா என்றால் இல்லை. பிரதிவாதிகள் ஏப்ரல் 2014ம் தேதியன்று கதிர் என்பவர் முன்னிலையில் ரூபாய் 1,50,000/– கடன் பெற்று அதை திருப்பி செலுத்திவிட்டார்கள் என்றும் அப்போது வாங்கப்பட்ட கடனிற்கான கடனுறுதி பத்திரத்தை நான் பிரதிவாதிகளுக்கு திருப்பி கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. நான் ஊரில் அதிக நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு 07/2014 என்ற வழக்கை தொடர்ந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்தபோது வேறு ஏதாவது பத்திரத்தை வாங்கினேனா என்றால் வீட்டு பத்திரத்தை கொடுத்தார்கள் அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்று தெரியாது. அசல் ஆவணத்தை பிரதிவாதிகளிடம் இருந்து வாங்கியது உண்மைதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சிறிய பெட்டிக்கடை வைத்துள்ளேன். ஒருநாளைக்கு சுமார் 200/– ரூபாய் வரை வருமானம் வரும், அதை தவிர வேறு எந்த வருமானமும் இல்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டில் பெயர், தந்தை பெயர், முகவரி ஆகியவை நிரப்பபடவில்லை என்றால் சரியல்ல, நிரப்பபட்டுள்ளது. 2014ம் ஆண்டு கொடுத்த கடனிற்காக பெற்ற கடனுறுதி சீட்டை வைத்து தற்போது பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் இருந்து மொத்த பணத்தையும் திரும்ப பெற்றுவிட்டேன் என்றும் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**